**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**O.S. No. 193 of 2021**
**Deposition of Witness for : PW 2**

| | |
|---|---|
| Name | : சங்கரபாணி |
| Father/Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : ------ |
| Calling | : |
| Religion | : ------ |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.08.2025

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2ம் சாட்சி ஆவேன். என் தரப்பில் முதன்மை நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. அதில் இடப்பட்டுள்ள கையொப்பம் என்னுடையது தான். சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

சங்கீதாவுக்கும், சீதாராமனுக்கும் கல்யாணம் ஆனதாக எனக்கு தகவல் சொன்னார்களா என்றால் சரியல்ல, நான் தான் திருமணம் செய்து வைத்தேன். என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் அவ்வாறு நான் தான் முன்நின்று திருமணம் செய்து வைத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சங்கீதாவுக்கும், சீதாராமனுக்கும் கல்யாணம் ஆகவேயில்லை என்றால் சரியல்ல. திருமண தேதி மற்றும் கிழமை தற்போது நியாபகம் இல்லை. இந்த நிருபண வாக்குமூலம் தயார் செய்தபோது திருமண தேதி, கிழமை நியாபகமில்லை என்று தான் சொன்னேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சங்கீதாவுக்கும், சீதாராமனுக்கும் கல்யாணம் ஆகவில்லை என்றும், அவர்கள் திருமண தம்பதிகளாக குடும்பமே நடத்தவில்லை என்றால் சரியல்ல. சீதாராமனின் முதல் மனைவி தமிழ்செல்வி சிறுநாத்தூர் கிராமத்தில் அவரது தாயார்

வீட்டில் வாழ்கிறார். சீதாராமனோடு தமிழ்செல்வி இன்றளவும் கீழ்பென்னாத்தூரில் வாழ்ந்து வருகிறார் என்றால் நான் வெளியூரில் இருப்பதால் எனக்கு அது பற்றி தெரியாது. சங்கீதாவும், சீதாராமனும் முறைப்படி வாழவில்லை என்றும், திருமணம் செய்யாமல் முறையற்ற உறவில் வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. சங்கீதாவுக்கும், சீதாராமனுக்கும் சிவசக்தி என்ற குழந்தையும் மற்றும் அவர்களுக்கு பெண் குழந்தை பிறந்ததும் (பின்னால் இறந்து விட்டது) முறையான பிறப்புகள் அல்ல என்றால் சரியல்ல. சங்கீதா சீதாராமனின் முறையான மனைவி அல்ல என்றும், அதனால் சீதாராமனின் சொத்தில் எந்தவித உரிமையும் வாதி சிவசக்தி சட்டப்படி கோர முடியாது என்றால் சரியல்ல. நான் பவானியின் அக்கா கணவர் ஆவேன். வாதி சிவசக்திக்காக அவரது பாட்டி பவாணி பாதுகாவலர் என்ற முறையில் வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். பவாணிக்கு நான் நெருங்கிய உறவு என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.